0 3 DEC 2020

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) - 2020-2021 -ஆம் ஆண்டு சிறப்பு மத்திய நிதி உதவித் திட்டத்தின் கீழ் தாட்கோ திட்டங்களை செயல்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வழிகாட்டி நெறிமுறைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉ.தி2)துறை

**அரசாணை (நிலை) எண். 113**

**நாள்: 24.11.2020**
**சார்வரி வருடம் கார்த்திகை 9,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

படிக்கப்பட்டது:-

மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண். ஜி1/2809/2019, நாள்.17.09.2020

******

**ஆணை:-**

மத்திய அரசு வழங்கும் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான விதிமுறைகள் வகுக்கப்பட்டு ஒவ்வொரு உட்பிரிவிற்கும் பல்வேறு கால கட்டங்களில் தனித்தனியாக வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கும் தொகையில் ஆதிதிராவிடர்களுக்கான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக தாட்கோ நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.

2. 2020–2021–ஆம் ஆண்டிற்கான மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.150.00 கோடி மானியத்தில் 25,725 பயனாளிகளுக்கு செயல் திட்டம் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளை 21.05.2020 அன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட திருத்திய செயற்குறிப்பின் மீது அரசாணை வெளியிடவும், அதற்குண்டான நிதி வழங்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். தாட்கோ மேலாண்மை இயக்குநர் அளித்துள்ள செயல்திட்டம் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

## மத்திய சிறப்பு நிதியுதவி திட்டம் 2020–2021–ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1) பொருளாதார மேம்பாட்டு திட்டங்களின் திட்ட செயலாக்கத்தினை நிர்ணயம் செய்ய கீழ்க்கண்டவாறு வழிமுறைகள் வகுக்கப்படுகின்றன.

i. ஒவ்வொரு பயனாளியையும் தேர்வு செய்யும்போது திட்ட அறிக்கையினை பகுப்பாய்வு செய்து நல்ல திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ii. தேர்வு செய்யப்படும் திட்டம், சொத்தினை உருவாக்கக் கூடியதாகவும், கடனை திருப்பி செலுத்தத் தக்க வகையில் போதிய வருவாயை ஈட்டக் கூடியதாகவும், நீடித்த பயனை பயனாளிக்கு அளிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

iii. தேர்வு செய்யப்படும் திட்டம், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த திட்டங்களுக்கு நபார்டு வங்கியின் வழிகாட்டு நெறிமுறைகளையும், இதர தொழில்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் (DIC)வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி முழுமையான திட்ட அறிக்கையுடன் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். அதிகபட்சமாக தாட்கோ மானியம் வழங்குவதற்கு, திட்டத் தொகையின் உச்ச வரம்பு ரூ.7.50 இலட்சம் வரை நிர்ணயிக்கப்படுகிறது. பயனாளிகளின் சக்திக்கு ஏற்பவும், தெரிவு செய்யப்படும் திட்டத்திற்கு ஏற்பவும் திட்டத் தொகையை வங்கிகள் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

iv. தமிழக அரசு தோட்டக்கலை, உணவு பதப்படுத்துதல், நுண்ணீர் பாசனம், கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, ஆழ்கடல் மீன் பிடித்தல், உள்நாட்டு மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு, உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விவசாயம் சார் தொழில்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதால் மேற்காண் தொழில்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

v. அதிக மேய்ச்சல் நிலங்களும், நீர்வளமும் உள்ள மாவட்டங்களில் பால் பண்ணை தொழில் அனுமதிக்கப்படும். அதற்கு ஆவின் அல்லது தனியார் பால் கூட்டுறவுச் சங்கங்களோடு ஒப்பந்தம் செய்யும் நிலையினை கட்டாயமாக்கி பின் நிதியுதவி வழங்கப்படும். கால்நடை வளர்ப்பு தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் வாங்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை, விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, மருத்துவ உடல் தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை அந்தந்த மாவட்டங்களிலுள்ள கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்/அரசு கால்நடை மருத்துவரிடம் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

vi. பெட்டிக் கடை (ம) மளிகை கடை வைத்தல், இரு சக்கரம்/மூன்று சக்கரம்/நான்கு சக்கரம் வாகனங்களில் சென்று துணி வியாபாரம் செய்தல், வாடகை பாத்திரக்கடை வைத்தல், சைக்கிள் கடை, கை/தள்ளு வண்டி மூலம் காய்கறி, பழங்கள் விற்பனை செய்தல், வாடகை நாற்காலி கடை நடத்துதல், மைக் செட், கரி மூட்டம் அமைத்தல் (அதிகளவில் இத்தொழில் நடைபெறும் மாவட்டம் தவிர) மற்றும் தென்னை(ம)பனை ஓலை முடைதல் போன்ற தொடர் வருவாய் ஈட்டுதலை உறுதி செய்ய இயலாத எதிர்பார்ப்பிற்கேற்றார் போல் சமூக மாற்றங்களை ஏற்படுத்தாத திட்டங்களை தேர்வு செய்வது குறித்து கூட்டுக் கலந்தாய்வின் அடிப்படையில் முடிவு செய்ய, தேர்வு குழுவினரின் தக்க பரிசீலனைக்கு பின் தகுதியான நபர் ஒருவரின் பசியை போக்கவும், வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் வேறு எந்த வாய்ப்பினையும் பயன்படுத்த முடியாத நிலையில், மேற்காண் தொழில்களில் ஏதேனும் ஒன்று மேம்படுத்தும் எனில், அவ்விண்ணப்பங்கள் குறித்து பரிசீலனை செய்யலாம்.

vii. வங்கியாளர்களால் திட்ட அறிக்கையில் உள்ளபடி முழுக் கடனையும் வழங்காமல் மானியத் தொகையினை மட்டுமே கடனாக வழங்குதல் மற்றும் சொத்து உருவாக்கத்தின் போது வங்கியிலிருந்து நேரடியாக பயனாளிகள் பெயரில் காசோலை வழங்குதல் போன்ற நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும். தாட்கோ மூலம் பயனடையும் பயனாளிகளுக்கு வங்கிக் கடனுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு வழங்கப்படும் மானியத்தொகையினை முன்னேற்பு மானியமாக (Front Ended Subsidy) கருதி மானியத் தொகைக்கு வட்டி கணக்கிடாமல், வங்கியாளர்களால் வழங்கப்படும் வங்கிக் கடனுக்கு மட்டுமே வட்டி கணக்கிடப்பட வேண்டும். விண்ணப்பம் வங்கிக்கு பரிந்துரை செய்யப்படும்போது, விண்ணப்பதாரர்களின் திட்ட தொகையினையும், திட்டத்தினையும் நன்கு பகுத்து ஆராய்ந்து, விண்ணப்பதாரருக்கு அத்திட்டம், அவர் வசிக்கும் பகுதியில் தொடர் வருமானத்தை ஈட்டித்தரக் கூடியது என்பதனையும், சொத்து உருவாக்குதல் மற்றும் பயன்பாட்டுச் சான்று பெறக்கூடியது என்பதையும் ஆராய்ந்து உறுதி செய்த விண்ணப்பங்களுக்கு மட்டுமே மானிய முன்மொழிவு படிவம் (Form III) தாட்கோவிற்கு வழங்கும்போது வங்கி மேலாளரின் பரிந்துரையுடன் மானியம் கோரி அனுப்பப்பட வேண்டும். மானிய முன்மொழிவு படிவம் (Form III) வழங்கப்பட்ட பின் அதற்கான மானியம் தாட்கோவிலிருந்து வங்கிக்கு விடுவிக்கப்பட்ட பின்பு அவ்விண்ணப்பத்தினை திட்டம் சாத்தியமானதல்ல என வகுத்து அதனை தள்ளுபடி/நிராகரிப்பு செய்வதை வங்கியாளர்கள் தவிர்த்திட வேண்டும்.

## 2) <u>திட்ட வரையறைகள்:-</u>

திட்டங்களை பொறுத்தவரை கீழ்க்கண்ட பொருள் வரையறை (Definition) அளிக்கப்படுகிறது.

I. <u>குடும்பம்</u>:- குடும்பம் என்பது கணவன், மனைவி, அவர்தம் திருமணமாகாத மகள் மற்றும் மகன், பெற்றோரை சார்ந்துள்ள விதவை மகள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். திருமணமான மகன், மகள் தனிக் குடும்பமாக கருதப்படுவர்.

நில உடைமைத் திட்டத்தின் கீழ் குடும்பத்தின் மொத்த உடைமை (total holding ) என்பதை முடிவு செய்யும்பொழுது மட்டும், திருமணமான மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுவர்.

**விளக்கம்:-** இத்திட்டத்தில் ஒரு குடும்பத்தின் நில உடைமை, வாங்கும் நிலத்தையும் சேர்த்து புன்செய் நிலமாக இருப்பின் 5 ஏக்கரும், நன்செய் நிலமாக இருப்பின் 2 1/2 ஏக்கரும் கணக்கிடப்படும்.

**உதாரணம்:-a.**'அ'என்பவருக்கு 2 ஏக்கர் நஞ்சை நிலம் இருப்பின் அவரோ/அவரது வாரிசுதாரரோ 1 ஏக்கர் 50 சென்ட் வரை நஞ்சை நிலம் வாங்கலாம் நஞ்சை நிலத்தோடு புஞ்சை நிலம் எனில் 1 ஏக்கர் புஞ்சை வாங்க முடியும். அவருக்கோ அல்லது அவரது வாரிசுதாரருக்கோ கூடுதலாக சேர்த்து 3 ஏக்கர் இருக்கலாம்.

**உதாரணம்:- b.**ஒருவர் 3 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்திருப்பின் 2 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம். ஆக இவரது புஞ்சை நில உடமை 5 ஏக்கராக இருக்கலாம்.

II. ஆண்டு வருமானம்.- தாட்கோ திட்டங்களில் பயனடைய குடும்ப ஆண்டு வருமானச் சான்றிதழ், விண்ணப்பதாரரின் பெயரில் வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். பொருளாதார திட்டங்களில் பயன்பெற குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். குழு திட்டங்களுக்கு குழு ஊக்குனரின் குடும்ப

ஆண்டு வருமானமும், குழு உறுப்பினர்களின் குடும்ப ஆண்டு வருமானமும் ரூ.3 இலட்சம் வரையும் SEPY-C திட்டத்திற்கு விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் ரூ.3 இலட்சம் வரை இருக்கலாம். விண்ணப்பதாரர்களின் குடும்ப உறுப்பினர்கள் அரசு ஓய்வு ஊதியம் பெறுபவர்களாக இருப்பின் இத்தொகை குடும்ப வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

III. **மானியம் :–** சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக, கடன் சுமையைக் குறைப்பதற்கும், கடனைத் திருப்பிச் செலுத்த ஊக்குவிக்கும் காரணியாக, சிறப்பு உதவியாக, திட்டத் தொகையில் கடன் தொகையை குறைக்கும் வகையில், பயனாளிக்கு வழங்கப்படும் நிதியுதவியாகும்.

- தனி நபர்களுக்கான திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியம் விடுவிக்கப்படும்.
- வங்கிக் கடனுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, வங்கிக் கடன் தொகையுடன் மானியமும் வங்கிக்கு விடுவிக்கப்படும்.
- சுய உதவிகுழுக்களுக்கு பொருளாதார நிதியுதவி திட்டத்தின் கீழ் திட்டத் தொகையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படும்.

IV. **கடன் தொகை:–** திட்டத்தொகையில் மானியத்தொகை தவிர மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகும். தாட்கோ விடுவிக்கும் மானியத் தொகைக்கு மட்டும் திட்டத் தொகையின் உச்ச வரம்பு ரூ.7.50 இலட்சமாகும். பயனாளியின் திறன், சக்தி, ஜாமீன் மற்றும் வங்கியின் வழி முறைகளுக்கேற்ப அலகுத் தொகையை வங்கிகள் அதிகரித்துக் கொள்ளலாம்.

V. **நிதி விடுவிக்கும் முறை:-**பொருளாதார திட்டங்களுக்கு குழுவினால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள், வங்கிக்கடன் கோரி வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்படும். வங்கிகளிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வங்கி கடன் அளிப்பது குறித்து இசைவு தெரிவித்து படிவம்–3 பெறப்பட்டவுடன், மானியத் தொகை மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களின் செயல்முறை ஆணை வழியே நேரிடையாக வங்கிக்கு அனுப்பப்படும்.

VI. **ஆய்வு:–** நிலம் வாங்குதல்/ நிலம் மேம்பாட்டு திட்டம் ஆகியவற்றிற்கு மானியம் விடுவிப்பதற்கு முன் மாவட்ட மேலாளர் நில ஆய்வு மேற்கொள்ள வேண்டும். உரிய ஆவணங்களை நிலம் விற்பவர் மற்றும் வாங்குபவரிடம் பெறவேண்டும்.

VII. **சொத்து உருவாக்கல் –** திட்டங்களுக்கு மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப்பட்ட 10 நாட்களுக்குள் சொத்து உருவாக்குதலை வங்கி மேலாளர் மற்றும் தாட்கோ மாவட்ட மேலாளர் தல ஆய்வு செய்து, சொத்து உருவாக்கப்பட்ட பின் அதன் விவரத்தை புகைப்படத்துடன், தாட்கோ மாவட்ட மேலாளர் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆவணங்களின் நகல்களை அலுவலகப் பாதுகாப்பில் பயனாளிவாரியாக வைக்கவேண்டும்.

**3) மாவட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு:–**

மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தாட்கோ பொருளாதார திட்டங்களுக்கான மாவட்ட வாரியான ஒதுக்கீடு அந்தந்த மாவட்டங்களின் ஆதிதிராவிட மக்கள் தொகையின் விகிதச்சாரப்படி மேற்கொள்ளப்படும். எனினும் மாவட்டங்களின் காலநிலை மற்றும் பின்பற்றப்படும் தொழில்களின் அடிப்படையில் ஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்ய மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

மேலும் பொருளாதார திட்டத்திற்கான தொழில்களை (Trade) தெரிவு செய்யும் அதிகாரம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மாவட்டவாரியான திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் உள்ஒதுக்கீட்டில் இலக்கினை அடையவில்லையெனில் மாவட்ட ஒதுக்கீட்டிற்கு மிகாமல் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேறு தொழில்களுக்கு மேலாண்மை இயக்குநரே ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

4) இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவு செய்யும் முறை: –

2012–2013–ஆம் நிதியாண்டிலிருந்து தாட்கோவின் அனைத்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்படுகின்றன. இவ்வாண்டும் தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ அல்லது நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பிக்கும் போது இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாதவர்கள் காகித விண்ணப்பங்களை எழுதி மாவட்ட மேலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

i. விண்ணப்பதாரர் பற்றிய விவரங்கள்.
ii. புகைப்படம்.
iii. இருப்பிடச் சான்றிதழ் எண்.
iv. சாதி சான்றிதழ் (சான்றிதழ் எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்).
v. குடும்ப ஆண்டு வருமான சான்றிதழ் எண். (சான்றிதழ் எண். வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம்) நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1 1/2 ஆண்டுகள் முன்பு வரை வருமானச் சான்று பெற்றிருக்கலாம். அதாவது வருமானச் சான்று 1 1/2 ஆண்டுக்குள் பெற்றிருக்க வேண்டும்).
vi. பட்டா/சிட்டா–(நிலம் வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாடு திட்டங்களுக்கு மட்டும்)
vii. குடும்ப அட்டை எண்.
viii. ஆதார் எண்.
ix. விண்ணப்பதாரரின் கைப்பேசி எண்.
x. விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரி (e-mail address).
xi. திட்டங்களின் விவரங்கள் முதலியவற்றை இணைய தளத்தில் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும். ஒன்று முதல் பத்து வரை உள்ள விவரங்கள் இன்றியமையாதவை. கைப்பேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர, திட்டங்களுக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணி நேரமும் பதிவு செய்யலாம். மேலும், விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மட்டும் பதிவு செய்யலாம். இதற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு பயனாளியிடமிருந்து ரூ.60/– வசூல் செய்யப்படும். இத்தொகையில் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்காக, தாட்கோ மூலம் பயிற்சி பெற்று பணியமர்த்தப்படும் கணினி இயக்குபவருக்கு ரூ.30/–உம், மீதமுள்ள தொகை புகைப்படம் மற்றும் இதர ஆவணங்களை ஸ்கேன் (scan) செய்து பதிவேற்றம் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும். இத்தொகைக்கான கணக்கு பதிவேடு மாவட்ட அலுவலகத்தில் தனியாக பராமரிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் ஒப்புகை ரசீது விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

1. அ) நிலம் வாங்கும் திட்டம் :– **Land Purchase Scheme (LPS)**

ஆதிதிராவிட மக்களின் நில உடைமையை அதிகரிக்கும் பொருட்டு, இத்திட்டம் கீழ்க்கண்ட தகுதி/ நிபந்தனைகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி:—

- ஆதிதிராவிட இனத்தை சேர்ந்த மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் இல்லாத குடும்பங்களில் கணவர் அல்லது மகன்களுக்கு வழங்கப்படும்.
- 18–65 வயதிற்குள்ளாக இருக்கவேண்டும்.
- விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்க வேண்டும். விவசாயக் கூலி வேலை செய்பவராகவும் இருக்கலாம்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- ஒருவர் ஒருமுறை மட்டுமே மானியம் பெற தகுதியுடையவர். ஒரு திட்டத்தின் கீழ் ஒருமுறை மானிய உதவி பெற்றால், பின்னர் அவர் தாட்கோ செயல்படுத்தும் சிறப்பு மைய உதவியுடனான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெற தகுதியற்றவராகிறார்.

நிபந்தனைகள்:—

இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்கும் போது கீழ்க்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

- வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்ய வேண்டும்.
- நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத பிற இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் நிலமற்றவர்கள் அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நிலம் மற்றும் வாங்க உத்தேசித்துள்ள / உறுதி செய்துள்ள நிலம் உள்பட 2.5 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்குள் இருக்கலாம்.
- சார்பதிவாளர் அலுவலக இணையதளம் வாயிலாக அல்லது நேரில் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு பெறப்பட வேண்டும்.
- நிலத்தின் மதிப்பு மேற்கண்ட மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்படும்.
- விண்ணப்பம் செய்த மகளிரின் பெயரில் அல்லது மகன்கள் அல்லது கணவர் பெயரில் மட்டுமே வாங்கப்படும் நிலம் பதிவு செய்யப்பட வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100% முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்படுகிறது.
- வாங்கப்படும் நிலத்தினை விண்ணப்பதாரர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது. எனவே நிலம் வாங்கியவுடன் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் சார்பதிவாளரிடம் தெரிவித்து இந்நிலம் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யாதவாறு வில்லங்கம் (Lien) ஏற்படுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:—

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்:--

தாட்கோ மாவட்ட மேலாளர், மானியத் தொகை விடுவித்த 30 நாட்களில் விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலக ஆவணங்களில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் சொத்து உருவாக்கத்தின் ஆவணம் மற்றும் சான்றிதழ்களோடு கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆ) நில மேம்பாட்டு திட்டம்: – Land Development Scheme (LDS)

இத்திட்டத்தின் மூலம் நிலவளத்தை மேம்படுத்துதல், ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு, பம்ப் செட் அமைத்தல், குழாய் அமைத்தல், சொட்டு நீர் பாசனம் மற்றும் சுழல்முறை நீர்ப்பாசனம் அமைத்தல் போன்றவற்றிற்காக மானியம் வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி :--

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த இரு பாலர்களாக (பெண்கள் மற்றும் ஆண்கள்) இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை நஞ்சை 2.5 ஏக்கர் அல்லது புஞ்சை 5 ஏக்கருக்குள் இருக்க வேண்டும்.
- 18–65 வயதிற்குள் இருக்கவேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
- திருமணமாகாத விண்ணப்பதாரராக இருப்பின் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- திருமணமான விண்ணப்பதாரராக இருப்பின் அவரது குடும்பம் தனிக் குடும்பமாகக் கருதப்படும். இந்நிலையில் அவர் அல்லது அவரது குடும்பத்தினர் தாட்கோவின் திட்டங்களில் மானியம் பெற்றிருக்கக்கூடாது.

நிபந்தனைகள்:--

- நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் இருக்க வேண்டும்.
- மூன்று ஆண்டுகளுக்கான அடங்கல் மற்றும் 10 ஆண்டுகளுக்கான வில்லங்கச் சான்று பெற வேண்டும்.
- நிலத்திற்கான பட்டா மற்றும் சிட்டா வைத்திருக்க வேண்டும்.
- புலப்பட நகல் (FMB Sketch) மற்றும் 'அ'பதிவேடு ('A' Register) நகல் வைத்திருக்க வேண்டும்.
- திட்ட அறிக்கை வைத்திருக்க வேண்டும். (மண் வளத்தன்மையை மேம்படுத்துவதற்கு நீர் ஆதாரம் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்).
- நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழி காட்டுதலின்படி நிலவளம் மேம்படுத்துதல், பம்ப் செட் அமைத்தல்/ சொட்டு நீர்ப்பாசனம்/ சுழல்முறை நீர்ப்பாசனம், நீர்ப்பாசன குழாய் அமைத்தல், ஆழ்துளை கிணறு, திறந்தவெளி கிணறு அமைத்தல் ஆகியவற்றிற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist/Hydrologist) சான்று பெறப்பட வேண்டும். அனைத்து இனங்களிலும் நபார்டு வழிகாட்டுதல் முறை பின்பற்றப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

**(இ) துரித மின் இணைப்பு வழங்கும் திட்டம் : Fast Track Power Supply:**

தகுதியுடைய விண்ணப்பதாரர் ஒருவருக்கு ரூ.75,000/– வைப்புத் தொகையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் நேரடியாக தாட்கோ செலுத்தி ஆதிதிராவிட விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி:-

1. விண்ணப்பதாரர் ஆதிதிராவிட விவசாயியாக இருக்க வேண்டும்.
2. வயது வரம்பு ஏதுமில்லை.
3. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்திருக்க வேண்டும்.

விண்ணப்பம் பெறும் முறை:-

தாட்கோ மூலம் துரித மின் இணைப்பு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெற விரும்பும் விவசாயிகள் தாட்கோ இணையதளம் மூலம் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை படியிறக்கம் செய்தோ/ நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

விண்ணப்பிக்கும் போது விண்ணப்பத்துடன் ஸ்கேன் (scan) செய்து இணைக்கப் பட வேண்டிய ஆவணங்கள்:–

1. விண்ணப்பதாரர் பற்றிய விவரங்கள்.
2. புகைப்படம்.
3. குடும்ப அட்டை எண்/வட்டாட்சியர் கையொப்பமிட்ட இருப்பிட சான்று.
4. சாதி சான்றிதழ் எண் (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்).

5. குடும்ப வருமான சான்றிதழ் எண். [எண். வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம் நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1 1/2 ஆண்டுகள் முன்பு வரை வருமானச் சான்று பெற்றிருக்கலாம். அதாவது வருமானச் சான்றின் வயது 1 1/2 ஆண்டு வரை இருக்கலாம்].
6. பட்டா / சிட்டா –நிலப்பட்டா மற்றும் சிட்டா அடங்கல் நகல், "அ" பதிவேடு நகல், நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டதற்கான நிலத்தின் வரைபடம்.
7. மின்சார வாரியத்தில் பதிவு செய்த இரசீது நகல்.

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–</u>

மாவட்ட மேலாளர் அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தும் உள்ளனவா என மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு (Scrutiny of Application) விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீது மாவட்ட மேலாளர் அல்லது உதவி மேலாளரால் தள ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தள ஆய்வு முடிந்த பின்னர் இலவச மின் இணைப்பு பெற வேண்டி தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர் பட்டியல் மாவட்ட மேலாளர்களால், மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்படும். இவ்வாறு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) நபருக்கு ரூ.75,000/– வீதம் வைப்புத் தொகையில், முதற்கட்டமாக நபர் ஒருவருக்கு ரூ.10,000/– வீதம் விண்ணப்பதாரர் பட்டியலுடன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் விடுவிப்பார்.

தாட்கோவினால் பெறப்பட்ட விண்ணப்பதாரர் பட்டியல் உரிய மாவட்ட மின் வாரிய அலுவலகங்களுக்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திலிருந்து தயார் நிலை பதிவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்படும்.

தாட்கோ மூலம் துரித மின் இணைப்பு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு பெறுவதற்கு தயார் நிலையினை மின்வாரிய அலுவலகத்தில் பதிவு செய்த விண்ணப்பதாரர் பட்டியலினை தொகுத்து (Consolidate) பிரதி மாதம் இறுதியில் மீதமுள்ள தொகை ரூ.65,000/– வழங்கும் பொருட்டு தாட்கோவிற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திருந்து அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட பட்டியல் அனைத்து தாட்கோ மாவட்ட மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களால் முன்மொழிவு செய்யப்பட்டு பெறப்பட்ட பட்டியல் தொகுக்கப்பட்டு (Consolidate) மீதமுள்ள தொகை நபருக்கு ரூ.65,000/– வீதம் விண்ணப்பதாரர் பட்டியலுடன் சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்கள் விடுவிப்பார். இவ்வாறு விண்ணப்பதாரர் நபர் ஒருவருக்கு மொத்த தொகை ரூ.75,000/– வீதம் தாட்கோ மேலாண்மை இயக்குநர் அவர்களால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு விடுவிக்கப்படும் .

தாட்கோவினால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திற்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகை நபர் ஒருவருக்கு ரூ.75,000/– வீதம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைமையகத்திலிருந்து மின் இணைப்பு வழங்கப்பட்டவர்/ வழங்கப்படாதவர் பட்டியலுடன் மின் இணைப்பு வழங்கப்படாதவரின் முழு வைப்புத்தொகை விவசாயி ஒருவருக்கு ரூ.75,000/– வீதம் தாட்கோவிற்கு திரும்ப அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பதாரருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட மேலாளர், தாட்கோ சரிபார்த்து மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை அளிக்க வேண்டும். இதன் விவரத்தினை இணைய தளத்திலும் மாவட்ட மேலாளர், தாட்கோ அவர்களால் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

ஈ) கிணறு அமைத்தல்:-

இத்திட்டத்தின் மூலம் ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு, பம்ப் செட் கொட்டகைஅமைத்தல் போன்றவற்றிற்காக மானியம் வழங்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி :-

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த இரு பாலர்களாக (பெண்கள் மற்றும் ஆண்கள்) இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் உள்ள நில உடைமை நஞ்சை 2.5 ஏக்கர் அல்லது புஞ்சை 5 ஏக்கருக்குள் இருக்க வேண்டும்.
- 18–65 வயதிற்குள் இருக்கவேண்டும்.
- விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராக இருக்கவேண்டும்.
- திருமணமாகாத விண்ணப்பதாரராக இருப்பின் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- திருமணமான விண்ணப்பதாரராக இருப்பின் அவரது குடும்பம் தனிக் குடும்பமாகக் கருதப்படும். இந்நிலையில் அவர் அல்லது அவரது குடும்பத்தினர் தாட்கோவின் திட்டங்களில் மானியம் பெற்றிருக்கக்கூடாது.

நிபந்தனைகள்:-

- ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு, பம்ப் செட் கொட்டகை அமையவுள்ள நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் இருக்க வேண்டும்.
- மூன்று ஆண்டுகளுக்கான அடங்கல் மற்றும் 10 ஆண்டுகளுக்கான வில்லங்கச் சான்று பெற வேண்டும்.
- நிலத்திற்கான பட்டா மற்றும் சிட்டா வைத்திருக்க வேண்டும்.
- புலப்பட நகல் (FMB Sketch) மற்றும் 'அ'பதிவேடு ('A' Register) நகல் வைத்திருக்க வேண்டும்.
- திட்ட அறிக்கை வைத்திருக்க வேண்டும். (மண் வளத்தன்மையை மேம்படுத்துவதற்கு நீர் ஆதாரம் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்).
- ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு, பம்ப் செட் கொட்டகைஅமைக்க, அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழிகாட்டுதலின்படி, ஆழ்குழாய் கிணறு / திறந்த வெளி கிணறு, பம்ப் செட் கொட்டகை அமைத்தல் ஆகியவற்றிற்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
- விண்ணப்பதாரரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist/Hydrologist) சான்று பெறப்படவேண்டும். அனைத்து இனங்களிலும் நபார்டு வழிகாட்டுதல் முறை பின்பற்றப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

2. தொழில் முனைவோர் திட்டம்:– (சிறப்புத் திட்டம்)
Entrepreneur Development Scheme (Special Scheme) EDP.

அ) பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் அமைக்க கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது.

தகுதிகள்

- எண்ணெய் நிறுவனத்தால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் வயது வரம்பினை பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் எண்ணெய் நிறுவனத்தால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். தொழில் சார்ந்த (Professional) கல்வி பயின்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவர்களின் நியமனத்திற்கு உரிய தகுதியை பெற்றிருக்கவேண்டும்.

ஆவணங்கள்:–

அ) அனைத்து திட்டங்களின் கீழ் சமர்ப்பிக்கப்படும் குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்று, சாதிச்சான்றிதழ், பிறந்ததேதி, வருமானச்சான்றிதழ் மற்றும் திட்ட அறிக்கையோடு கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

ஆ) குறிப்பிட்ட சில்லரை விற்பனை நிலையம் அமையவுள்ள இடம் எண்ணெய் நிறுவனத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட விளம்பரம். (Notification of places where outlet to be established).

நிலம் வாங்க உத்தேசிக்கும் நிலையில் :–

மேற்காண் ஆவணங்களுடன் வாங்க உத்தேசித்துள்ள நிலத்தின் சிட்டா பட்டா, 'அ' பதிவேட்டு நகல் மற்றும் புலப்படச்சுவடி நகல் (copy of 'A' Register, Adangal, Chitta+Title Deed+FMB)

(i) முன்வைப்புத் தொகைக்காக மானியம் கோருவதாக இருப்பின் மேற்காண் (அ) மற்றும் (ஆ) உடன் இவரது வங்கி கணக்கு புத்தகம் மற்றும் பரிவர்த்தனை சீட்டு (Financial Transaction Statement)

(ii) தாட்கோ நிறுவனத்தின் முன் அனுமதியின்றி முன்வைப்பு தொகை விடுவிக்கப்படமாட்டாது என்ற வங்கி உத்திரவாதக் கடிதம்.

(iii) விண்ணப்பதாரர் உத்திரவாதக் கடிதம் - உறுதிமொழி படிவம்.

இயக்க மூலதனத்திற்கு :–

- ❖ எண்ணெய் நிறுவனங்களின் ஏற்பு கடிதம்.
- ❖ மாவட்ட வருவாய் அலுவலரால் வழங்கப்படும் தடையின்மை சான்று.

நிபந்தனைகள்:–

- பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலைய முகவர்களின் நியமனத்திற்கு விண்ணப்பித்திருக்க வேண்டும்.
- பெட்ரோல் மற்றும் டீசல் சில்லறை விற்பனை நிலையத்திற்காக வாங்க உத்தேசித்துள்ள நிலத்தினை விண்ணப்பதாரரே தெரிவு செய்யவேண்டும்.
- நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்படவேண்டும்.
- நிலத்தினை விண்ணப்பதாரர் 20 வருடங்களுக்கு விற்பனை செய்யக்கூடாது.

- விண்ணப்பதாரர் பெயரில் வணிக பயன்பாட்டிற்கான நிலங்கள் ஏதும் அம்மாவட்டத்தில் இருக்கக்கூடாது.
- இத்திட்டத்தின் கீழ் அமைக்க உத்தேசித்துள்ள அடிப்படை கட்டமைப்புகள் எண்ணெய் நிறுவனத்தின் விதி/தேவைக்குட்பட்டு விண்ணப்பதாரரே முடிவு செய்து கொள்ளவேண்டும்.
- கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும் எண்ணெய் நிறுவனத்தின் நேர்முகத் தேர்விற்கான மற்றும் தெரிவு செய்வதற்கான அழைப்பாணை கடிதம் பெற்றிருக்கவேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:–</u>

மேலாண்மை இயக்குநர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மேலாண்மை இயக்குநர், தாட்கோ | தலைவர் |
| நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர், தாட்கோ | உறுப்பினர் |
| பொது மேலாளர் (திட்டம்), தாட்கோ | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட மாவட்ட மேலாளர், தாட்கோ | செயலர் மற்றும் உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

### ஆ) <u>தொழில் முனைவோர் திட்டங்கள்:–Entrepreneur Development Scheme (EDP):–</u>

<u>தகுதி:–</u>

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- தாட்கோ பயிற்சித் திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 18– 65 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- கடன் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும்.
- விண்ணப்பதாரர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- திருமணமாகாத விண்ணப்பதாராக இருப்பின் விண்ணப்பதாரரோ அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது,
- திருமணமான விண்ணப்பதாராக இருப்பின் இவரது குடும்பம் தனிகுடும்பம் எனக் கருதப்படும். இந்நிலையில் இவர் அல்லது அவர் குடும்பத்தினரோ தாட்கோவின் திட்டங்களில் மானியம் ஏதும் பெற்றிருக்கக்கூடாது.

<u>நிபந்தனைகள்:–</u>

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- ❖ துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- ❖ இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.
- ❖ கால் நடை வளர்ப்பு தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் வாங்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை விலைப்புள்ளி, திட்ட அறிக்கை, மருத்துவ உடல் தகுதிச்சான்றிதழ் ஆகியவற்றை அந்தந்த மாவட்டங்களிலுள்ள கால்நடை பராமரிப்பு துறை அலுவலர்/அரசு கால்நடை மருத்துவரிடம் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

- ❖ பால்பண்ணை திட்டங்களுக்கு ஆவின் போன்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.
- ❖ மலர் நிலையங்கள் அமைத்தல் தனியார் நிறுவனங்கள் போன்றவர்களிடம் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.
- ❖ உள்நாட்டு மீன் வளர்ப்பு, நன்னீர் இறால் வளர்ப்பு போன்ற தொழில்புரிய விருப்பமுள்ளவர்கள் குறைந்த பட்சம் சொந்தமாக 1/2 ஏக்கர் நிலம் வைத்திருக்க வேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-</u>

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ அலுவலர் தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக நிதியினை நேரடியாக விடுவிப்பார்.

தாட்கோ மாவட்ட மேலாளர், மானிய தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் கடன் வழங்கப்பட்ட இனங்களுக்கு சொத்து உருவாக்கப்பட்டுள்ளதை நேரில் தல ஆய்வு செய்ததை புகைப்படத்துடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**3. <u>அ) இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் :- Self Employment Programme for Youth (SEPY)</u>**

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளின் எண்ணிக்கையில் 25 சதவீதம் தாட்கோ மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

<u>தகுதி :-</u>

- விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- **குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.**
- 18 – 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.
- கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.
- மத்திய அல்லது மாநில அரசு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிறுவனங்களின் தகுதிச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

நிபந்தனைகள்:–

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

❖ துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

❖ இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணபதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.

❖ விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலே தொழில் புரிய வேண்டும்.

விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக வினியோக நிறுவனத்திற்கு நிதியினை நேரடியாக விடுவிப்பார். தாட்கோ மாவட்ட மேலாளர், மானிய தொகை விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள், கடன் வழங்கப்பட்ட இனங்களுக்கு சொத்து உருவாக்கப்பட்டுள்ளதை நேரில் தல ஆய்வு செய்ததை புகைப்படத்துடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**ஆ) மருத்துவ மையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் இது போன்ற பிற இனங்கள்:– Clinic, Pharmacy, Opticals, Physiotherapy, Formation and Development of Medical Laboratory and related items.(SEPY-C):-**

தகுதி :–

மருத்துவ மையம்(Clinic) அமைப்பதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு குறைந்தபட்சம் எம்.பி.பி.எஸ் (M.B.B.S), பி.டி.எஸ் (B.D.S) சித்தா (B.S.M.S.) ஆயுர்வேத மருத்துவம் (BAMS) மற்றும் இயற்கை வைத்தியத்தில் (BNYS) ஆகியவற்றில் ஏதாவது ஒரு பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

- மருந்தியல் (Pharmacy) அமைப்பதற்கு D.Pharm./B.Pharm பயின்றிருத்தல் வேண்டும்.
- கண்ணாடியகம் (Opticals),(Diploma in Ophthalmic Assistant) அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட படிப்பு முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- முடநீக்கு மையம் (Physiotheraphy Centre)அமைப்பதற்கு உரிய முடநீக்கவியல் பட்டப்படிப்பு (Physiotheraphy) படித்து உரிய கவுன்சிலில் (Council) பதிவு செய்திருக்க வேண்டும்.

- இரத்தப் பரிசோதனை நிலையம் (Diploma in Medical Laboratory Technology/ Certificate Course in Medical Laboratory Technology) அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட தகுதி சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- இந்திய மருத்துவ கழகம் (Medical Council) / தொடர்புடைய நிறுவனத்தில் (Competent Authority) பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

<u>நிபந்தனைகள்:-</u>

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலே தொழில் புரிய வேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை:-</u>

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## 4. <u>சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி :- Economic Assistance (EA) to Self Help Group(SHG)</u>

தகுதி:-

- ஆதிதிராவிடர் மகளிர் குழுவாக இருத்தல் வேண்டும்.
- குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 12 முதல் 20 வரை இருக்கலாம்.
- குழு உறுப்பினர்கள் 18–65 வயது வரை உடையவராக இருக்கலாம்.
- குழு உறுப்பினர்களின் குடும்ப ஆண்டு வருமானமும் ரூ.3 இலட்சம் வரை இருக்கலாம் .
- இதுவரை எந்த ஒரு அரசு மானியமும் பெறாமல் குழுவாக இருத்தல் வேண்டும்.
- சுழல்நிதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- தாட்கோ, மாவட்ட மேலாளர் மற்றும் உதவி மேலாளர் கூட்டாக தல ஆய்வு செய்து சொத்து உருவாக்கிட உறுப்பினர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய பின்னர் மானியம் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- இத்திட்டத்தின் சிறப்பினமாக உணவகம் அமைக்கவும், வேளாண் உற்பத்தி குழுக்களின் கீழ் வேளாண் இடு பொருட்கள் முகவர்களாக செயல்படவும், சந்தை மதிப்பின் அடிப்படையில் மிகப் பிரபலமடைந்த நிறுவனங்களின் முகவர்களாக அங்கீகாரம் பெற்றிருப்பின் அதற்கான அலுவலகங்கள் மற்றும் முதலீட்டிற்கும் கடனுதவி வழங்கப்படும். குழு திறன்பெற்றுள்ள தொழில்கள் அனைத்திலும் முதலீடு செய்வதற்கு மானியம் வழங்கப்படும்.
- கூட்டுத் திட்டமாக ஆழ்துளை கிணறு அமைக்க நபார்டு விதிமுறைகளுக்கு உட்பட்டு மானியம் வழங்கப்படும்.
- குழுவானது மகளிர் திட்ட அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்டதாகவும் (SHG ID Assigned), செயல்பாட்டில் இருந்து வரும் குழுவாகவும், மகளிர் திட்ட அலுவலகத்தில் தர மதிப்பீடு செய்யப்பட்ட குழுவாகவும் இருத்தல் வேண்டும்.

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:-</u>

கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

| | |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| திட்ட அலுவலர், மகளிர் திட்டம் | உறுப்பினர் |
| இணை இயக்குநர்,கால்நடை பராமரிப்பு துறை | உறுப்பினர் |
| மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | உறுப்பினர் |
| சம்பந்தப்பட்ட வங்கியின் ஒருங்கிணைப்பாளர் | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | உறுப்பினர் |
| மாவட்ட மேலாளர், தாட்கோ | ஒருங்கிணைப்பாளர் |

மேலும் குழு மேற்கொள்ளும் பொருளாதார தொழில்களுக்கேற்ப துறை சம்மந்தப்பட்ட அலுவலரும் குழுவில் உறுப்பினராக இருக்க வேண்டும்.

- தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## 5. மதிப்பாய்வு செய்தல்:- Project Evaluation

தாட்கோ திட்டங்கள் சரிவர செயல்படுத்துவது குறித்து மதிப்பாய்வு செய்வது மிகவும் அவசியமாகும். இதனால் திட்டங்கள் தகுதியுடையவர்களுக்கு சென்று அடைவதையும், சொத்து உருவாக்கப்படுவதையும் உறுதி செய்வதோடு திட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்தும் கண்காணிக்க இயலும். எனவே, மதிப்பாய்வு செய்வதற்கான செலவினத் தொகை ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணியினை அரசின் மதிப்பீட்டு மற்றும் கண்காணிப்பு பாசறை செய்யும்.

## 6. திறன் மேம்பாட்டு பயிற்சி:- Skill Development Training

சிறப்பு மைய உதவியில் இருந்து ஆரம்ப நிலை பயிற்சிகளான கட்டுமான தொழில் சார்ந்த பயிற்சிகள், மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், கணினி பயிற்சிகள், தகவல் தொழில் நுட்பம் மற்றும் அவை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும். மேலும் இலகுரக வாகன ஓட்டுனர் பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் பெற்றுத்தரப்படும்.

பொது :-

கள ஆய்வில் சொத்து உருவாக்கம் செய்யப்படவில்லை என்பதை அறிந்தாலோ தாட்கோவினால் வழங்கப்படும் மானியம் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என அறிந்தாலோ தாட்கோ பணியாளர், வங்கியாளர், மற்றும் பயனாளிகள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். பயனாளிகளைத் தேர்வு செய்து மானியம் மற்றும் கடன் தொகை வழங்கும்போது மாவட்ட குழுவும், வங்கி மேலாளரும் மிக கவனமுடன் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பயனாளிகள் மானியம் மற்றும் கடன் தொகையை உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறாரா என்பதை ஆய்வு செய்து உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

7. 2020–2021–ஆம் ஆண்டில் 25,725 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ.150.00 கோடி மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ள பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைக் கொண்ட மாநில செயல் திட்டம் மற்றும் அவற்றிற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2020–2021–ஆம் ஆண்டிற்கான சிறப்பு மத்திய நிதியுதவியில் ரூ.150.00 கோடி நிதியுதவியுடன் பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் (இணைப்பில் கூறப்பட்டுள்ளது) செயல்படுத்த ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகளின் விதிமுறைகளுக்குட்பட்டு தாட்கோ மூலம் செயல்படுத்த அரசு ஆணையிடுகிறது.

8. மேலும், மேலாண்மை இயக்குநர், தாட்கோ பயனாளிகளைத் தெரிவு செய்யும் போதும், திட்டங்களை செயல்படுத்தும்போதும், திட்டத்தின் பயன் அதிகபட்ச பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். வங்கிகள் திட்டத்திற்கான கடனை வழங்கும்போது, திட்டத்திற்கான மானியத்தை தாட்கோ மூலம் வழங்கப்பட வேண்டும்.

9. மேலே கூறப்பட்ட திட்டங்களின் நிதியுதவியும், பயன்களும் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு மட்டுமானதாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அல்லது வேறு ஏதேனும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் ஆதிதிராவிடர்கள் தாட்கோ மாநில செயல் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயனடைய தகுதியற்றவர் என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறு மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.40683/ஆதி(ம)பந/2020 நாள்: 19.11.2020–இல் வழங்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை– 600 018.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.
மாநிலமுதன்மைக்கணக்காய்வுத்தலைவர், சென்னை–600 009/18.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை–600 006.
இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, சென்னை–600 006.
இயக்குநர், சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை, புதுடெல்லி –110 001.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–600 009.
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 600 009
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சென்னை–600 009.
அனைத்து மாவட்ட மேலாளர்கள், தாட்கோ (மேலாண்மை இயக்குநர்தாட்கோ வழியாக)
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (அனைத்து பிரிவுகள்), சென்னை–600 009.
நிதித் (ஆதி(ம)பந) துறை, சென்னை–600 009.
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சாஸ்திரி பவன், சென்னை–600 006.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/2020

பிரிவு அலுவலர்.

24/11/2020

## இணைப்பு – I

அரசாணை (நிலை) எண். 113, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 24.11.2020

## 2020–2021 ஆண்டு செயல்திட்டம்

### வருமானம் ஈட்டும் திட்டங்கள்

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு – பயனாளிகளின் எண்ணிக்கை – மொத்தம் | இலக்கு – பயனாளிகளின் எண்ணிக்கை – SCA to SCSP திட்டத்தில் | நிதி இலக்கு – மொத்தம் | நிதி இலக்கு – மானியம் | நிதி இலக்கு – வங்கிக் கடன் | நிதி இலக்கு – இதர (பயனாளியின் பங்கு) | SCA to SCSP-வில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள்** | | | | | | | | | |
| 1 | விவசாயம் மற்றும் தோட்டக் கலை தொடர்பான திட்டங்கள் | நிலம் வாங்கும் திட்டம் – நிலமற்ற விவசாய பெண் தொழிலாளர்களுக்கு விவசாய நிலங்களை வாங்குவதற்கு நிதி உதவி. | 30 | 30 | 150.00 | 45.00 | 97.50 | 7.50 | 45.00 |
| | | நில மேம்பாட்டுத் திட்டம் – சாகுபடி நிலம், உப்பளம் போன்றவற்றுக்கு விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிதி உதவி, விதைகள் / உரங்கள் / பூச்சிக்கொல்லிகள் / இயற்கை விவசாயம் தொடர்பான கடைகள் அமைத்தல். கிணறுகள் தோண்டுவது, ஆழ்துளை கிணறுகள் அமைத்தல். | 270 | 270 | 1,360.00 | 415.00 | 877.50 | 67.50 | 415.00 |
| | | துரித மின்னிணைப்பு திட்டம் – ஆதிதிராவிட விவசாயிகளின் விவசாய நிலங்களை பயிரிடுவதற்கான நீர்ப்பாசன நோக்கத்திற்கான மின் இணைப்பு, சூரிய பம்ப் அமைத்தல். | 2,000 | 2,000 | 1,500.00 | 1,500.00 | - | - | 1,500.00 |

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு: பயனாளிகளின் எண்ணிக்கை – மொத்தம் | இலக்கு: பயனாளிகளின் எண்ணிக்கை – SCA to SCSP திட்டத்தில் | நிதி இலக்கு: மொத்தம் | நிதி இலக்கு: மானியம் | நிதி இலக்கு: வங்கிக் கடன் | நிதி இலக்கு: இதர (பயனாளியின் பங்கு) | SCA to SCSP-வில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் தொழில் தொடங்குவதற்கான நிதியுதவி | | | | | | | | |
| | 1) கால்நடை பராமரிப்பு மற்றும் மாடு வளர்ப்பு<br>2) தொழில் துறை, சேவை மற்றும் வணிகம் (ஐ.எஸ்.பி) | கால்நடைகள், பால் பண்ணை, கோழி, நாட்டு ஆடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு தொடர்புடைய திட்டங்கள், இறால் வளர்ப்பு, மீன்பிடி படகுகள், வலைகள் வாங்குதல் போன்றவற்றிற்கான நிதி உதவி. | 4,278 | 4,278 | 12,820.07 | 4,347.67 | 7,831.40 | 641.00 | 4,347.67 |
| | | வாகன எரிபொருள் நிலையம் (Petrol bunk) எண்ணெய் மற்றும் எரிவாயு விற்பனை நிறுவனம் அமைத்தல். | 20 | 20 | 59.96 | 20.33 | 36.63 | 3.00 | 20.33 |
| | | தோல் பதனிடும் தொழிற்சாலை, தச்சு மற்றும் மரவேலை தளவாடங்கள் தயாரிக்கும் அலகுகள் ஆகியவை சார்ந்த உற்பத்தி நிலையம் அமைத்தல். | 187 | 187 | 560.40 | 190.05 | 342.33 | 28.02 | 190.05 |
| | | செங்கல் சூளை தொடர்பான அலகுகள்/கட்டிடக்கல் தயாரிப்பு அலகுகள் அமைத்தல். | 59 | 59 | 176.81 | 59.96 | 108.01 | 8.84 | 59.96 |
| | | ஆயத்த ஆடைகள் உற்பத்தி மற்றும் தையல் சார்ந்த அலகுகள் அமைத்தல். | 570 | 570 | 1,708.14 | 579.28 | 1,043.45 | 85.41 | 579.28 |
| | | எழுது பொருட்கள் மற்றும் புத்தகக் கடைகள் அமைத்தல் போன்றவை. | 50 | 50 | 149.83 | 50.81 | 91.53 | 7.49 | 50.81 |
| | | உணவகம், தேநீர் கடைகள், பெட்டிகடைகள் அமைத்தல் போன்றவை | 70 | 70 | 209.80 | 71.17 | 128.14 | 10.49 | 71.17 |

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு பயனாளிகளின் எண்ணிக்கை மொத்தம் | இலக்கு பயனாளிகளின் எண்ணிக்கை SCA to SCSP திட்டத்தில் | நிதி இலக்கு மொத்தம் | நிதி இலக்கு மானியம் | நிதி இலக்கு வங்கிக் கடன் | நிதி இலக்கு இதர (பயனாளியின் பங்கு) | SCA to SCSP-வில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சில்லறை விற்பனை கடைகள், காய்கறி மற்றும் மளிகை கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்றவை | 417 | 417 | 1,249.64 | 423.79 | 763.37 | 62.48 | 423.79 |
| | | சுற்றுலா வாகனம் வாங்குதல், வாடகை மகிழுந்து (Call Taxi), பாரம் ஏற்றும் வாகனங்கள் வாங்குதல்(Load vehicle), சாலையோர தள்ளுவண்டி கடைகள், பயணிகள் ஆட்டோ போன்றவை வாங்குதல். | 2,024 | 2,024 | 6,065.40 | 2,056.96 | 3,705.17 | 303.27 | 2,056.96 |
| 3 | இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் வணிகத்தை உருவாக்க பொருளாதார உதவி | | | | | | | | |
| | 1) தொழில், சேவை மற்றும் வணிகம் (ஐ.எஸ்.பி) | உடற்பயிற்சிக்கூடம், அழகுநிலையம் அமைத்தல் போன்றவை | 15 | 15 | 54.30 | 16.33 | 35.25 | 2.72 | 16.33 |
| | | நான்கு சக்கர வாகன பழுது நீக்கும் கடைகள் அமைத்தல், இரு சக்கர வாகன பழுது நீக்கும் கடைகள், சேவை மையங்கள் அமைத்தல் போன்றவை | 397 | 397 | 1,438.95 | 432.78 | 934.22 | 71.95 | 432.78 |

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு பயனாளிகளின் எண்ணிக்கை | | நிதி இலக்கு | | | | SCA to SCSP-வில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | SCA to SCSP திட்டத்தில் | மொத்தம் | மானியம் | வங்கிக் கடன் | இதர (பயனாளியின் பங்கு) | |
| | | அடுமனை (Bakery) கடைகள், பனிக்கூழ் (Ice cream) உற்பத்தி அலகுகள், பால் சார்ந்த பொருட்கள் தயாரிப்பு அலகுகள், கட்டுமான தொடர்பான வேலைகள், மின்னணுவியல் கடைகள் இயந்திர பட்டறைகள் மோட்டார் வாகனம் பழுது நீக்கும் கடைகள் / சைக்கிள் கடைகள் அமைத்தல். | 459 | 459 | 1,663.39 | 500.28 | 1,079.94 | 83.17 | 500.28 |
| | | கணினி தட்டச்சு மையங்கள், நகலகம் மற்றும் அச்சிடும் மையங்கள், கணினி தேடல் / உலாவல் மையங்களை அமைத்தல் போன்றவை | 113 | 113 | 409.06 | 123.03 | 265.58 | 20.45 | 123.03 |
| | | கணினி வன்பொருள் நிலையம், அலைபேசி சேவை கடைகள், தொலைகாட்சி பழுதுநீக்கும் கடைகள் மற்றும் மின்னணு சேவை மையங்கள் அமைத்தல் போன்றவை | 40 | 40 | 144.80 | 43.55 | 94.01 | 7.24 | 43.55 |

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு | | நிதி இலக்கு | | | | SCA to SCSP-யில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பயனாளிகளின் எண்ணிக்கை | | மொத்தம் | மானியம் | வங்கிக் கடன் | இதர (பயனாளியின் பங்கு) | |
| | | | மொத்தம் | SCA to SCSP திட்டத்தில் | | | | | |
| | | தச்சு அலகுகள் மற்றும் வீட்டு உபயோக தச்சு தளவாடங்கள் தயாரிக்கும் அலகுகள், இரும்பு மற்றும் சிமெண்ட் கடை, பட்டறைகள் அமைத்தல் போன்றவை. | 28 | 28 | 101.37 | 30.49 | 65.81 | 5.07 | 30.49 |
| | | சுற்றுலா வாகனம் வாங்குதல், வாடகை மகிழுந்து (Call Taxi), பாரம் ஏற்றும் வாகனங்கள் வாங்குதல்(Load vehicle), சாலையோர தள்ளுவண்டி கடைகள், பயணிகள் ஆட்டோ போன்றவை வாங்குதல். | 856 | 856 | 3,092.34 | 933.06 | 2,004.16 | 155.12 | 933.06 |
| | | அச்சிடுதல் மற்றும் அதனைச் சார்ந்த பிணைப்பு வேலைகள். | 90 | 90 | 325.80 | 97.99 | 211.52 | 16.29 | 97.99 |
| 4 | **இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு திட்டம் (SEPY-C) – மருத்துவம் மற்றும் அதனை சார்ந்த சிகிச்சையகம்.** | | | | | | | | |
| | 1) தொழில், சேவை மற்றும் வணிகம் (ஐ.எஸ்.பி) (Industries ,service, Business) | பல்நோக்கு மருத்துவமனைகள், பல் மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகள் அமைப்பதற்கான நிதிஉதவி. மருத்துவ ஆய்வகம், கண்கண்ணாடியகம், ஊடுகதிர் மையங்கள், இரத்த பரிசோதனைமையங்கள் மற்றும் மருந்துக் கடைகள் அமைத்தல் போன்றவை | 50 | 50 | 500.00 | 112.50 | 362.50 | 25.00 | 112.50 |

| வ.எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு பயனாளிகளின் எண்ணிக்கை மொத்தம் | SCA to SCSP திட்டத்தில் | நிதி இலக்கு மொத்தம் | மானியம் | வங்கிக் கடன் | இதர (பயனாளியின் பங்கு) | SCA to SCSP-வில் கோரப்படும் நிதி (கலம் 6 இல் இருந்து) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | சுய உதவிகுழுக்களுக்கான பொருளாதாரக்கடனுதவி | | | | | | | | |
| | ஆதி திராவிட சுய உதவி குழுக் களுக்கான பொருளா தார கடனுதவி | ஆதிதிராவிடர் சுய உதவிக்குழுக்களுக்கு பால் மாடு அல்லது ஆடு வளர்ப்பு போன்றவை | 1,540 | 1,540 | 6,159.97 | 256.67 | 5,595.30 | 308.00 | 256.67 |
| | | மாடு வளர்ப்பு மற்றும் பால் பண்ணை, கோழி, ஆடு மற்றும் செம்மறிஆடு வளர்ப்பு சார்ந்த அலகுகள் போன்றவை | 2,052 | 2,052 | 8,208.00 | 342.00 | 7,455.60 | 410.40 | 342.00 |
| | | கைவினைப் பொருட்கள், தோல் பதனிடும் மையங்கள், செங்கல் தயாரித்தல், கட்டிடக்கல் தயாரிப்பு தொடர்பான அலகுகள் போன்றவை | 1,388 | 1,388 | 5,544.00 | 231.00 | 5,035.80 | 277.20 | 231.00 |
| | | காலணிகள் தயாரித்தல், தையல் தைக்கும் மையங்கள் துணிக்கடை (அ)துணியகம் அமைத்தல். | 560 | 560 | 2,239.97 | 93.30 | 2,034.67 | 112.00 | 93.30 |
| | | சில்லறை கடைகள், காய்கறி மற்றும் மளிகை கடைகள் அதைச் சார்ந்த இதர கடைகள். | 462 | 462 | 1,848.00 | 77.00 | 1,678.60 | 92.40 | 77.00 |
| | | **மொத்தம்** | 18,025 | 18,025 | 57,740.00 | 13,050.00 | 41,878.00 | 2,812.00 | 13,050.00 |

ஒட்டெம் டாய்
கூடுதல் தலைமைச் செயலாளர்

/உண்மை நகல்/

சி. [signature] 24/11/2020
பிரிவு அலுவலர்

24/11/20

இணைப்பு – II

அரசாணை (நிலை) எண் 113, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
நாள் 24.11.2020

2020–21 ஆண்டு செயல்திட்டம்

தமிழ்நாடு – திறன் மேம்பாட்டு பயிற்சிகள்

| வ. எண் | தொழில் பிரிவு | திட்டத்தின் பெயர் | இலக்கு பயனாளிகளின் எண்ணிக்கை | | மொத்த செலவு | நிதி பிரேரணை |
|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | சிறப்பு மைய நிதி திட்டம் | (ரூபாய் இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | 1) தொழில், சேவை மற்றும் வணிகம் (ஐ.எஸ்.பி) | ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள் | 1000 | 1000 | 225.91 | 225.91 |
| 2 | | தானியங்கி துறை மற்றும் அதனுடன் தொடர்பான பயிற்சிகள் | 1400 | 1400 | 300.76 | 300.76 |
| 3 | | வங்கி, நிதி மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள் | 600 | 600 | 37.00 | 37.00 |
| 4 | | அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள் | 400 | 400 | 66.75 | 66.75 |
| 5 | | மென்பொருள் மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள் | 600 | 600 | 107.28 | 107.28 |
| 6 | | சுகாதாரம் தொடர்பான பயிற்சிகள் | 900 | 900 | 195.54 | 195.54 |
| 7 | | தோல் அதனுடன் தொடர்பான பயிற்சிகள் | 400 | 400 | 51.04 | 51.04 |
| 8 | | தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்பான பயிற்சிகள் | 800 | 800 | 177.27 | 177.27 |
| 9 | | சரக்கு வாகன போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள் | 400 | 400 | 61.99 | 61.99 |
| 10 | | ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள் | 200 | 200 | 47.79 | 47.79 |
| 11 | | குழாய் செப்பனிடுதல் மற்றும் அதன் தொடர்பான பணிகள் | 400 | 400 | 113.97 | 113.97 |
| 12 | | மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்பான பயிற்சிகள் | 400 | 400 | 83.59 | 83.59 |
| 13 | | சில்லறை வணிகம் மற்றும் அதன் தொடர்பான பணிகள் | 200 | 200 | 31.11 | 31.11 |
| மொத்தம் | | | 7700 | 7,700 | 1,500.00 | 1,500.00 |

ஒட்டெம் டாய்,
கூடுதல் தலைமைச் செயலாளர்

/உண்மை நகல்/

சி. [signature] 24/11/2020
பிரிவு அலுவலர்
[signature] 24/11/2020

## இணைப்பு – III

## அரசாணை (நிலை) எண் 113, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 24.11.2020

2020–21 ஆண்டு செயல்திட்டம்

தேவைப்படும் மத்திய நிதியுதவி

| முக்கிய கூறுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை இலக்கு | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) | நிதி பிரேரணை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| வருமானம் ஈட்டும் திட்டங்கள் | 18,025 | 57,740 | 13,050 |
| திறன் மேம்பாட்டு திட்டங்கள் | 7,700 | 1,500 | 1,500 |
| கண்காணிப்பு மற்றும் திட்ட மதிப்பீடு | | 450 | 450 |
| மொத்தம் | 25,725 | 59,690 | 15,000 |

ஒட்டெம் டாய்,
கூடுதல் தலைமைச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்